<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 81/2019

Deposition of Witness : PW 1

Name : ஏழுமலை (வயது – 46)

Father's Name /W/o : த/பெ நாகப்பன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அசநெல்லிகுப்பம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 21.07.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சொத்து என் தந்தை வாங்கிய சொத்தா என்றால் ஆம். மேற்படி சொத்தின் சர்வே எண்.16/1டி ,16/3சி . வழக்கு சொத்தின் கிரைய ஆவணம் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் தந்தை கிரையம் பெற்றதாக சாட்சியம் அளித்தது தவறு என்றாலும் கிரையம் பெற்று இருந்தால் நான் கிரைய ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தந்தை பெயரில் உள்ள சொத்து எனக்கு வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

2. வழக்கு சொத்தின் ஐட்டம் 1,2 இன் விஸ்தீரணம் என்ன என்றால் எனக்கு தெரியாது. ஒரு சர்வே எண்ணில் உள்ள சொத்தை எதற்காக நான் இரண்டு பிரிவாக தெரிவித்துள்ளேன் என்றால் என்கு தெரியாது. வழக்கு சொத்தின் கிழக்கு, மேற்கு,வடக்கு,தெற்கு ஆகிய அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது.

3. இந்த வழக்கை 22.08.2019 ஆம் தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். துணை ஆட்சியர் பிரதிவாதியின் தந்தை கிருஷ்ணன் அளித்த மனுவிற்கு எனக்கு சம்மன் அனுப்பினார்களா என்றால் இல்லை விசாரணை நடத்தினார்களா என்றால் இல்லை. சர்வே எண்.16/1டி க்கு தவறுதலாக என் தந்தை பெயருக்கு யு.டி.ஆர் வழங்கிய காரணத்தினால் பிரதிவாதியின் தந்தை மேற்படி மனு அளித்தார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தந்தை கிருஷ்ணன் அவர்களுக்கு அசநெல்லிகுப்பத்தில் 16/1 சர்வே எண்ணில் 44.46 செண்ட் சொத்து உள்ளதா என்றால் தெரியாது.

4. எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த சர்வே எண்ணில் பிரச்சினை என்றால் 16/1 இல் பிரச்சினை. சர்வே எண்.16/3சி , 16/2டி இல் பிரதிவாதியுடன் பிரச்சினை இல்லையா என்றால் சரிதான். சர்வே எண் 16/1 உட்பிரிவு செய்யப்பட்டு தான் 16/1ஏ,பி,சி,டி ஆக பிரிக்கப்பட்டது அந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாட்சி பின்பு மாற்றி தெரியாது என்று சாட்சி அளித்தார்.

5. பட்டா எண்.50 க்கும் இந்த சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். பட்டா எண். 50 எந்த சர்வே எண் என்றால் 16/2பி. சர்வே எண்.16/1டி பட்டா எண் என்னவென்றால் 249. இந்நீதிமனற்த்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணையில் நான் மேற்படி ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது.

6.நான் சர்வே எண் 16/டி க்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் தெரிவித்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வருவாய் துறையினரால் சர்வே எண்.16/1டி பிரதிவாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றும்தவறுதலாக வாதியின் தந்தை பெயருக்கு வழங்கப்பட்டது என்று அறிக்கையிட்டார் என்றால்

தெரியாது. என் தந்தை நாகப்பன் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்து பிரதிவாதியின் தந்தை பெயருக்கு மாற்றம் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நான் வருவாய் துறை முன்னிலையில் ஆஜராகி விசாரணை நடைபெற்றது என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ள படி பிரதிவாதிகள் 2018 ஆண்டு அத்துமீறி நடைபெற்றதை பற்றி நான் காவல் துறையில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. என் வீடும் பிரதிவாதியின் வீடும் பக்கத்து பக்கத்து வீடு. நான் எத்தனை வருடத்திற்கு முன்பு வீடு கட்டினேன் என்றால் 30 வருடத்திற்கு முன்பு கட்டினேன். பிரதிவாதி எத்தனை வருடமாக பக்கத்து வீட்டில் இருக்கிறார் என்றால் தெரியாது.

8. நான் மேற்படி இடத்தில் குடியிருக்கும் முன்பே பிரதிவாதி பக்கத்து வீட்டில் குடியிருந்து வந்தார்களா என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் சர்வே எண்16/1டி மட்டும் தான் பிரச்சினை என்றால் சரிதான். 16/1டி முழுமையாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. துணை ஆட்சியர் நடத்திய விசாரணை பற்றி தெரிந்தும் பட்டா பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டது தெரிந்தும் நான் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. பிரதிவாதி தனது பதிலுரையில் துணை ஆட்சியர் வழங்கிய உத்தரவு, மேற்படி சர்வே எண்.16/1டி ற்கான பட்டா தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. சர்வே எண்.16/1டி க்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்றாலும் நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.